யானை-அனையவர் நண்பு ஒரீஇ நாய்-அனையார்
கேண்மை கெழீஇ-க்-கொளல்-வேண்டும் யானை
அறிந்து-அறிந்தும் பாகனை-ஏ கொல்லும் எறிந்த வேல்
மெய்யது-ஆ வால் குழைக்கும் நாய்

#214
பல-நாள்-உம் பக்கத்தார்-ஆயினும் நெஞ்சு-இல்
சில-நாள்-உம் ஒட்டார்-ஓடு ஒட்டார் பல-நாள்-உம்
நீத்தார் என கை-விடல் உண்டு-ஓ தம்-நெஞ்சத்து
யாத்தார்-ஓடு யாத்த தொடர்பு

#215
கோட்டு-ப்-பூ-ப்-போல மலர்ந்து பின்-கூம்பாது
வேட்டது-ஏ வேட்டது-ஆம் நட்பு-ஆட்சி தோட்ட-
கயப்பூ-ப்-போல் முன்-மலர்ந்து பின்-கூம்புவார்-ஐ
நயப்பார்-உம் நட்பார்-உம் இல்


-------------------------------------
proofed and segmented by v.s.r

#216
கடை-ஆயார் நட்பு-இல் கமுகு-அனையர் ஏனை
இடை-ஆயார் தெங்கு-இன்-அனையர் தலை-ஆயார்
எண்ண-அரும்-பெண்ணை-போன்று இட்ட-ஞான்று
இட்டது-ஏ
தொன்மை-உடையார் தொடர்பு

#217
கழுநீர்-உள் கார்-அடகேனும் ஒருவன்
விழுமிது-ஆ க் கொள்ளின் அமிழ்து-ஆம் விழுமிய
குய் த் துவை ஆர் வெண்-சோறு-ஏ-ஆயினும் மேவாதார்-
கைத்துண்டல் காஞ்சிரங்காய்

#218
நாய்-க்-கால் சிறு-விரல்-போல் நன்கு-அணியர் ஆயினும்
ஈ-க்-கால்-துணை-உம் உதவாதார் நட்பு என்-ஆம்
சேய்த்தானும் சென்று கொளல்-வேண்டும் செய்-விளைக்கும்
வாய்க்கால்-அனையார் தொடர்பு

#219
தெளிவு-இலார் நட்பு-இன் பகை நன்று சாதல்
விளியா அரு-நோய்-இன் நன்று-ஆல் அளிய
இகழ்தல்-இன் கோறல் இனிது-ஏ மற்று இல்ல
புகழ்தல்-இன் வைதல்-ஏ நன்று

#220
மரீஇ பலர்-ஒடு பல்-நாள் முயங்கி
பொரீஇ பொருள் தக்கார்-க்-கோடல்-ஏ-வேண்டும்
பரீஇ உயிர் செகுக்கும் பாம்பு-ஒடு-உம் இன்னு
மரீஇ பின்னை-ப்-பிரிவு

#221
நல்லார் என தாம் நனி-விரும்பி-க்-கொண்டார்-ஐ
அல்லார்-எனினும் அடக்கி க் கொளல்-வேண்டும்
நெல்லுக்கு உமி-உண்டு நீர்-க்கு நுரை-உண்டு
புல்-இதழ் பூ-வ்-இன்-கு-உம் உண்டு

#222
செறு-த்-தோறு உடைப்பினும் செம்-புனல்-ஒடு ஊடார்
மறுத்தும்-சிறை-செய்வர் நீர் நசைஇ வாழ்நர்
வெறுப்ப-வெறுப்ப ச் செயினும் பொறுப்பர்-ஏ
தாம் வேண்டி-க்-கொண்டார் தொடர்பு

#223
இறப்ப-வ்-ஏ தீய செயினும் தன்-நட்டார்
பொறுத்தல் தகுவது-ஒன்று-அன்றே நிற-க்-கோங்கு
உருவ-வண்டு ஆர்க்கும் உயர்-வரை-நாட
ஒருவர்-பொறை இருவர்-நட்பு

#224
மடி திரை-தந்து-இட்ட வான்-கதிர்-முத்தம்
கடு-விசை நாவாய் கரை அலைக்கும் சேர்ப்ப
விடுதல்-கு-அரியார் இயல்பு-இலர்-ஏல் நெஞ்சம்
சுடுதல்-கு மூட்டிய தீ

#225
இன்னு செயினும் விடற்பாலர்-அல்லார்-ஐ ப்
பொன்-ஆக ப் போற்றி க் கொளல்-வேண்டும் பொன்-ஒடு
நல்-இல் சிதைத்த தீ நாள்-தொறும் நாடி த் தம்-
இல்லத்தில் ஆக்குதல்-ஆல்

#226
இன்னு-செயினும் விடுதல்-கு அரியார்-ஐ த்
துன்னு-த்-துறத்தல் தகுவது-ஓ துன்ன-அருஞ்-சீர்
விண் குத்தும் நீள்-வரை-வெற்ப களைப-வ்-ஓ
கண் குத்திற்று என்று தம்-கை

#227
இலங்கு-நீர்-த்-தண்-சேர்ப்ப இன்னு-செயினும்
கலந்து பழி காணார் சான்றோர் கலந்த-பின்
தீமை எடுத்து உரைக்கும் திண்-அறிவு-இல்லாதார்
தாம்-உம்-அவர்-இன்-கடை

#228
ஏதிலார் செய்தது இறப்ப-வ்-ஏ-தீது எனினும்
நோதக்கது என்-உண்டாம் நோக்கும்-கால் காதல்
கழுமியார் செய்த கறங்கு-அருவி-நாட
விழுமிது-ஆம் நெஞ்சத்துள்-நின்று

#229
தமர் என்று தாம்-கொள்ள-ப்-பட்டவர்-தம்மை த்
தமர்-அன்மை தம்-அறிந்தார்-ஆயின் அவர்-ஐ த்
தமர்-இன்-உம் நன்கு-மதித்து தமர்-அன்மை
தம்-உள் அடக்கி-க்-கொளல்

#230
குற்றம்-உம் ஏனை-க்-குணம்-உம் ஒருவன்-ஐ
நட்ட-பின் நாடி த் திரிவேனேல் நட்டான்
மறை-காவா-விட்டவன் செல்வுழி ச் செல்க
அறை-கடல் சூழ் வையம் நக


proofed and segmented by v.s.r

#231
செறிப்பு இல் பழங்–கூரை–ச்–சேறு அணை ஆக
இறைத்து–உம் நீர்–ஏற்று–உம் கிடப்பர் கறை–க்–குன்றம்
பொங்கு அருவி தாழும் புனல்–வரை–நல்–நாட
தம்–கருமம் முற்றும்–துணை

#232
சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்று–ஆய்
மாரி–போல் மாண்ட பயத்தது–ஆம் மாரி
வறந்த–க்–கால் போலும்–ஏ வால்–அருவி–நாட
சிறந்த–க்–கால் சீர்–இலார் நட்பு

#233
நுண்–உணர்வினர்–ஒடு கூடி நுகர்வு–உடைமை
விண்ணுலகு–ஏ ஒக்கும் விழைவிற்று–ஆல் நுண்–நூல்
உணர்வு–இலர் ஆகிய ஊதியம்–இல்லார்–ப்–
புணர்தல் நிரயத்துள்–ஒன்று

#234
பெருகுவது–போல த் தோன்றி வை–த்–தீ–ப்–போல்
ஒரு–பொழுது–உம் செல்லாதே நந்தும் அருகு–எல்லாம்
சந்தன–நீள்–சோலை ச் சாரல் மலை–நாட
பந்தம்–இலாளர் தொடர்பு

#235
செய்யாத–செய்தும்–நாம் என்றல்–உம் செய்வதனை ச்
செய்யாது தாழ்த்து–க்–கொண்டு ஓட்டல்–உம் மெய்–ஆக–
இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்–க்கு–உம் அ–ந்–நிலை–ஏ
துன்புறூஉம் பெற்றி தரும்


proofed and segmented by v.s.r

#236
ஒரு—நீர் ப் பிறந்து ஒருங்கு நீண்ட—க்—கடைத்து—உம்
விரி நீர் க் குவளை—ஐ—ஆம்பல்—ஒக்கல்லா
பெரு—நீரார் கேண்மை கொளினும் நீர்—அல்லார்
கருமம்—கள் வேறு—படும்

#237
முற்றல் சிறு—மந்தி முன்—பட்ட தந்தை—ஐ
நெற்று—க்—கண்டன்ன—விரல்—ஆல் ஞெமிர்த்திட்டு க்
குற்றி—ப்—பறிக்கும் மலை—நாட இன்னாது—ஏ
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு

#238
முட்டு—உற்ற—போழ்தில் முடுகி என்—ஆர்—உயிர்—ஐ
நட்டான் ஒருவன் கை நீட்டேன்—ஏல் நட்டான்
கடி—மனை—கட்டு—அழித்தான் செல்வுழி ச் செல்க
நெடுமொழி—வையம் நக

#239
ஆன்—படு—நெய் பெய் கலன்—உள் அது களைந்து
வேம்பு—அடு—நெய் பெய்தனைத்து—அரோ தேம்—படு—
நல்—வரை—நாட நயம்—உணர்வார் நண்பு—ஒரீஇ
புல்—அறிவினர்—ஒடு நட்பு

#240
உரு—இன்—கு அமைந்தான்—கண் ஊராண்மை—இன்மை
பருகல்—கு அமைந்த பால் நீர்—அளாயற்று—ஏ
தெரிவு—உடையார் தீ—இனத்தர் ஆகுதல் நாகம்—
விரி—பெடை—ஒடு ஆடி—விட்டற்று

#241
பகைவர்–பணிவிடம் நோக்கி தகவு–உடையார்
தாம்–ஏ–உம் நாணி த் தலை–ச்–செல்லார் காணாய்
இளம்–பிறை–ஆய–க்–கால் திங்கள்–ஐ ச் சேராது
அணங்கு–அரும்–துப்பு–இன்–அரா

#242
நளி–கடல்–தண்–சேர்ப்ப நல்கூர்ந்த மக்கள்–கு
அணி–கலம்–ஆவது அடக்கம் பணிவு–இல்–சீர்
மாத்திரை–இன்றி நடக்கும்–ஏல் வாழும் ஊர்
கோத்திரம் கூற–ப்–படும்

#243
எ–ந்–நிலத்து வித்து இடினும் காஞ்சிரங்காழ்–தெங்கு–ஆகா
தென்னாட்டவர்–உம் சுவர்க்கம்–புகுதல்–ஆல்
தன்னால்–தான்–ஆகும்–மறுமை வட–திசை–உம்
கொன்னாளர் சால–ப்–பலர்

#244
வேம்பு–இன்–இலை–உள் கனி–இன்–உம் வாழை–தன்–
தீஞ்–சுவை யாதும்–திரியாது–ஆம் ஆங்கே
இனம் தீது எனினும் இயல்பு–உடையார் கேண்மை
மனம்–தீது–ஆம்–பக்கம் அரிது

#245
கடல்–சார்ந்தும் இன்–நீர் பிறக்கும் மலை–சார்ந்தும்
உப்பு–ஈண்டு–உவரி பிறத்தல்–ஆல் தம்–தம்–
இனத்து–அனையர்–அல்லர் எறி–கடல்–தண்–சேர்ப்ப
மனத்து–அனையர் மக்கள்–என்பார்


proofed and segmented by v.s.r

#246
பராஅரை-ப்-புன்னை படு-கடல்-தண்-சேர்ப்ப
ஒராஅல்-உம் ஒட்டல்-உம் செய்ப-வ்-ஓ நல்ல
மருஉ ச் செய்து யார்-மாட்டும் தங்கும் மனத்தார்
விராஅய் ச் செய்யாமை நன்று

#247
உணர உணரும் உணர்வு-உடையார்-ஐ ப்
புணர புணரும்-ஆம் இன்பம் புணரின்
தெரிய த் தெரியும் தெரிவு-இலாதார்-ஐ ப்
பிரிய பிரியும்-ஆம் நோய்

#248
நல்-நிலை-க்-கண் தன்னை-நிறுப்பான்-உம் தன்னை-
நிலை-கலக்கி கீழ்-இடுவான்-உம் நிலையினும்
மேல்-மேல் உயர்த்து-நிறுப்பான்-உம் தன்னை-த்-
தலையாக-ச்-செய்வான்-உம் தான்

#249
கரும-வரிசை-ஆல் கல்லாதார்-பின்-உம்
பெருமை-உடையார்-உம் சேறல் அரு-மரபு-இன்
ஓதம் அரற்றும் ஒலி-கடல்-தண்-சேர்ப்ப
பேதைமை-அன்று அது-அறிவு

#250
கருமம்-உம் உள்-படா போகம்-உம் துவ்வா
தருமம்-உம் தக்கார்-க்கு-ஏ செய்யா ஒரு-நிலை-ஏ
முட்டு-இன்றி மூன்று-உம் முடியும்-ஏல் அஃது என்ப
பட்டினம்-பெற்ற-கலம்


proofed and segmented by v.s.r

#251
நுண்-உணர்வு-இன்மை வறுமை அஃது-உடைமை
பண்ண ப் பணைத்த பெருஞ்-செல்வம் எண்ணும்-கால்
பெண்-அவாய் ஆண்-இழந்த-பேடி அணியாள்-ஓ
கண்-அவா-த்-தக்க-கலம்

#252
பல்-ஆன்ற-கேள்வி-ப்-பயன் உணர்வார் பாடு-அழிந்து
அல்லல் உழப்பது அறிதிர்-ஏல் தொல்-சிறப்பு-இன்
நாவின்-கிழத்தி உறைதல்-ஆல் சேராள்-ஏ
பூவின்-கிழத்தி புலந்து

#253
கல்-என்று தந்தை கழற அதன்-ஐ ஓர்-
சொல் என்று கொள்ளாது இகழ்ந்தவன் மெல்ல
எழுத்து-ஓலை பல்லார்-முன் நீட்ட விளியா-
வழுக்கோலை-க்-கொண்டு-விடும்

#254
கல்லாது-நீண்ட-ஒருவன் உலகத்து
நல்லறிவாளர்-இடை ப் புக்கு மெல்ல-
இருப்பினும் நாய்-இருந்தற்று-ஏ இராஅது-
உரைப்பினும் நாய்-குரைத்தற்று

#255
புல்லா ப் புன்-கோட்டி ப் புலவர்-இடை ப் புக்கு
கல்லாத சொல்லும் கடை-எல்லாம் கற்ற
கடாஅயினும் சான்றவர் சொல்லார் பொருள்-மேல்
படாஅ-விடு-பாக்கு அறிந்து

#256
கற்று அறிந்த நாவினர் சொல்லார் தம்-சோர்வு அஞ்சி
மற்றையர்-ஆவார் பகர்வர் பனை-இன்-மேல்


-------------------------------------
proofed and segmented by v.s.r

வற்றிய ஓலை கல-கலக்கும் எ-ஞ்-ஞான்றும்
பச்சோலை-க்கு இல்லை ஒலி

#257
பன்றி க் கூழ் ப் பத்தர்-இல் தேமா வடித்தற்று-ஆல்
நன்று-அறியா மாந்தர்-க்கு அறத்து-ஆறு உரைக்கும்-கால்
குன்று-இன்-மேல் கொட்டும் தறி-போல் தலை தகர்ந்து
சென்று இசையா-ஆகும் செவி-க்கு

#258
பால்-ஆல் கழீஇ பல-நாள் உணக்கினும்
வாலிது-ஆம்-பக்கம் இருந்தை-க்கு இருந்தன்று
கோல்-ஆல் கடாஅய் க் குறினும் புகல்-ஒல்லா
நோலா-உடம்பு-இன்-கு அறிவு

#259
பொழிந்து இனிது-நாறினும் பூ-மிசைதல்-செல்லாது
இழிந்தவை காமுறூஉம் ஈ-ப்-போல் இழிந்தவை
தாம் கலந்த நெஞ்சினர்-க்கு என்-ஆகும் தக்கார்-வாய் த்
தேன் கலந்த தேற்ற-ச்-சொல் தேர்வு

#260
கற்றார் உரைக்கும் கசடு அறு நுண்-கேள்வி
பற்றாது தன்-நெஞ்சு உதைத்தல்-ஆல் மற்றும்-ஓர்-
தன்-போல்-ஒருவன் முகம் நோக்கி தான்-உம் ஓர்
புன்-கோட்டி கொள்ளும்-ஆம் கீழ்

#261
அருகலது-ஆகி பல பழுத்த-க்-கண்ணும்
பொரி-தாள்-விளவு-இன்-ஐ வாவல் குறுகா
பெரிது-அணியர்-ஆயினும் பீடு-இலார் செல்வம்
கருதும் கடப்பாட்டது அன்று

#262
அள்ளி-க்-கொள்வன்ன குறு-முகிழ-ஆயினும்
கள்ளி-மேல் கை-ந்-நீட்டார் சூடும்-பூ-அன்மை-ஆல்
செல்வம்-பெரிது-உடையர்-ஆயினும் கீழ்கள்-ஐ
நள்ளார் அறிவு-உடையார்

#263
மல்கு-திரைய கடல்-கோட்டு-இருப்பினும்
வல்-ஊற்று-உவர் இல் கிணற்றின்-கண் சென்று உண்பர்
செல்வம்-பெரிது-உடையர் ஆயினும் சேண்-சென்றும்
நல்குவார்-கட்டு-ஏ நசை

#264
புணர் கடல் சூழ் வையத்து ப் புண்ணியம்-ஓ-வேறு-ஏ
உணர்வது-உடையார் இருப்ப உணர்வு-இலா
வட்டு-உம் வழுதுணை-உம் போல்வார்-உம் வாழ்ப-வ்-ஏ
பட்டு-உம் துகில்-உம் உடுத்து

#265
நல்லார் நயவர் இருப்ப நயம்-இலா க்
கல்லார்-க்கு ஒன்று ஆகிய காரணம் தொல்லை-
வினை-ப்-பயன்-அல்லது வேல்-நெடுங்-கண்ணாய்
நினைப்ப-வருவது-ஒன்று இல்

#266
நாறு த் தகடு-ஏ-போல் நல்-மலர்-மேல்-பொன்பாவாய்
நீறு-ஆய் நிலத்து விளி-அரோ வேறு-ஆய
புன்-மக்கள்-பக்கம் புகுவாய் நீ பொன்-போலும்
நன்-மக்கள்-பக்கம் துறந்து

#267
நயவார்-கண் நல்குரவு நாண்-இன்று-கொல்லோ
பயவார்-கண் செல்வம் பரம்ப-ப்-பயின்-கொல்


proofed and segmented by v.s.r

வியவாய்–காண் வேல்–கண்ணாய் இ–வ்–இரண்டு–உம்
ஆங்கே
நயவாது–நிற்கும்–நிலை

#268
வலவைகள்–அல்லாதார் கால்–ஆறு சென்று
கலவை–கள் உண்டு கழிப்பர் வலவைகள்
கால்–ஆறு–உம் செல்லார் கருனை–ஆல் துய்ப்ப–வ்–ஏ
மேல்–ஆறு பாய விருந்து

#269
பொன்–நிற–ச்–செந்–நெல் பொதி–ஒடு பீள்–வாட
மின் ஒளிர் வானம் கடல்–உள்ளும் கான்று உகுக்கும்
வெண்மை–உடையார் விழு–ச்–செல்வம் எய்திய–க்–கால்
வண்மை–உம்–அன்ன–தகைத்து

#270
ஓதி–உம் ஓதார் உணர்வு–இலார் ஓதாதும்
ஓதி–அனையார் உணர்வு–உடையார் தூய்து–ஆக
நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார் செல்வர்–உம்
நல்கூர்ந்தார் ஈயார் எனின்

#271
நட்டார்க்கு–உம் நள்ளாதவர்க்கு–உம் உள–வரை–ஆல்
அட்டது பாத்து–உண்டல் அட்டு–உண்டல் அட்டது
அடைத்து இருந்து உண்டு ஒழுகும் ஆவது இல் மாக்கள்–கு
அடைத்த–வ்–ஆம் ஆண்டை–க்–கதவு

#272
எ–த்–துணையானும் இயைந்த–அளவு–இன்–ஆல்
சிற்றறம் செய்தார் தலை–ப்–படுவர் மற்றை ப்
பெருஞ்–செல்வம் எய்திய–க்–கால் பின்–அறிதும் என்பார்
அழிந்தார் பழி–கடலத்துள்

#273
துய்த்து—க்—கழியான் துறவோர்—க்கு ஒன்று ஈகலான்
வைத்து க் கழியும் மடவோன்—ஐ வைத்த
பொருள்—உம் அவன்—ஐ நகும்—ஏ உலகத்து
அருள்—உம் அவன்—ஐ நகும்

#274
கொடுத்தல்—உம் துய்த்தல்—உம் தேற்று இடுக்கு—உடை—
உள்ளத்தான் பெற்ற பெருஞ்—செல்வம் இல்லத்து
உரு—உடை—க்—கன்னியர்—ஐ—ப்—போல பருவத்தால்
ஏதிலான் துய்க்க—ப்—படும்

#275
எறி—நீர் ப் பெருங்—கடல் எய்தி இருந்தும்
அறு—நீர் ச் சிறு—கிணற்று—ஊறல் பார்த்து உண்பர்
மறுமை அறியாதார் ஆக்கத்தின் சான்றோர்
கழி—நல்குரவு—ஏ தலை
#276
எனது—எனது என்று இருக்கும் ஏழை பொருள்—ஐ
எனது—எனது என்று இருப்பன்—யான்—உம் தனது—ஆயின்
தான்—உம் அதன்—ஐ வழங்கான் பயன்—துவ்வான்
யானும் அதன்—ஐ அது

#277
வழங்காத—செல்வர்—இன் நல்கூர்ந்தார் உய்ந்தார்
இழந்தார் என—ப்—படுதல் உய்ந்தார் உழந்து அதன்—ஐ க்
காப்பு உய்ந்தார் கல்லுதல்—உம் உய்ந்தார் தம்—கை—ந்—நோவ
யாப்பு உய்ந்தார் உய்ந்த—பல

#278
தனது—ஆக த் தான்—கொடான் தாயத்தவர்—உம்
தமது—ஆய—போழ்து—ஏ கொடாஅர் தனது—ஆக
முன்னே—கொடுப்பின் அவர்—கடியார் தான்—கடியான்
பின்னே அவர் கொடுக்கும்—போழ்து

#279
இரவலர்–கன்று–ஆக ஈவார்–ஆ–ஆக
விரகு–இன் சுரப்பது–ஆம் வண்மை விரகு–இன்றி
வல்லவர் ஊன்ற வடி ஆ–போல் வாய்–வைத்து க்
கொல்ல ச் சுரப்பது–ஆம் கீழ்

#280
ஈட்டல்–உம் துன்பம் மற்று ஈட்டிய ஒண்–பொருள்–ஐ க்
காத்தல்–உம் ஆங்கே கடுந்–துன்பம் காத்த
குறை–படின் துன்பம் கெடின் துன்பம் துன்பக்கு
உறைபதி மற்றை–ப்–பொருள்

#281
அத்து–இட்ட–கூறை அரை–ச்–சுற்றி வாழினும்
பத்து–எட்டு–உடைமை பலர்–உள்ளும் பாடு எய்தும்
ஒத்த–குடி–ப்–பிறந்த–க்–கண்–உம் ஒன்று–இல்லாதார்
செத்த–பிணத்தின்–கடை

#282
நீர்–இன்–உம் நுண்ணிது நெய் என்பர் நெய்–இன்–உம்
யாரும் அறிவர் புகை–நட்பம் தேரின்
நிரப்பு–இடும்பையாளன் புகும்–ஏ புகை–உம்
புகல்–கு–அரிய பூழை நுழைந்து

#283
கல் ஓங்கு வரை–மேல் காந்தள் மலரா–க்–கால்
செல்லா–வ்–ஆம் செம்–பொறி வண்டு–இனம் கொல்லை க்
கல்–ஆஅல் கிளி கடியும் கானக–நாட
இலாஆர்–க்கு இல்லை தமர்

#284
உண்டாய–போழ்து–இன் உடைந்துழி க் காகம்–போல்
தொண்டு–ஆயிரவர் தொகுப–வ்–ஏ வண்டு–ஆய் த்


--------------------------------------
proofed and segmented by v.s.r

திரிதரும்–காலத்து தீது–இலிர்–ஓ என்பார்–
ஒருவரும் இ–வ்வ்–உலகத்து இல்

#285
பிறந்த குலம் மாயும் பேர்–ஆண்மை மாயும்
சிறந்த–தம்–கல்வி–உம் மாயும் கறங்கு அருவி
கல்–மேல் கழூஉம் கண–மலை–நல்–நாட
இன்மை–தழுவப்பட்டார்–க்கு

#286
உள்–கூர்–பசி–ஆல் உழை நசைஇ ச் சென்றார்கள்–கு
உள்ளூர்–இருந்தும் ஒன்று–ஆற்றுதான் உள்ளூர்–
இருந்து உயிர் கொன்னே–கழியாது தான்–போய்
விருந்தினன்–ஆதல்–ஏ நன்று

#287
நீர்மை–ஏ–அன்றி நிரம்ப எழுந்த தம்–
கூர்மை–உம்–எல்லாம் ஒருங்கு–இழப்பர் கூர்மை–இன்
முல்லை–அலைக்கும்–எயிற்றாய் நிரப்பு என்னும்
அல்லல்–அடையப்பட்டார்

#288
இட்டாற்று–ப்–பட்டு ஒன்று இரந்தவர்–க்கு ஆற்றாது
முட்டாற்று–ப்–பட்டு முயன்று உள்ளூர்–வாழ்தல்–இன்
நெட்டாற்று–ச்–சென்று நிரை–மனை–இல் கை–ந்–நீட்டும்
கெட்ட–ஆற்று–வாழ்க்கை–ஏ நன்று

#289
கடகம் செறிந்த தம்–கைகள்–ஆல் வாங்கி
அடகு பறித்து க் கொண்டு அட்டு குடை–கலன்–ஆ
உப்பு–இலி–வெந்தை தின்று உள்–அற்று வாழ்ப–வ்–ஏ
துப்புரவு சென்று உலந்த–க்–கால்

#290
ஆர்த்த பொறிய அணி கிளர் வண்டு-இனம்
பூத்து ஒழி கொம்பு-இன்-மேல் செல்லா-வ்-ஆம் நீர்த்து-அருவி
தாழா உயர்-சிறப்பு-இன் தண்-குன்ற-நல்-நாட
வாழாதார்-க்கு இல்லை தமர்

#291
திரு-மதுகை-ஆக த் திறன்-இலார் செய்யும்
பெருமிதம் கண்ட-க்-கடைத்து-உம் எரி மண்டி க்
கானம்-தலைப்பட்ட தீ-ப்-போல் கனலும்-ஏ
மானம்-உடையார் மனம்

#292
என்பு-ஆய் உகினும் இயல்பு-இலார்-பின் சென்று
தம்-பாடு உரைப்பர்-ஓ தம்-உடையார் தம்-பாடு
உரையாமை-முன் உணரும் ஒண்மை-உடையார்-க்கு
உரையார்-ஓ தாம்-உற்ற-நோய்

#293
யாம்-ஆயின் எம்-இல்லம் காட்டுதும் தாம்-ஆயின்
காண-வ்-ஏ கற்பு அழியும் என்பார் போல் நாணி
புறங்-கடை-வைத்து-ஈவர் சோறு-உம் அதனால்
மறந்திடுக செல்வர்-தொடர்பு

#294
இம்மை-உம் நன்று-ஆம் இயல்-நெறி-உம் கை-விடாது
உம்மை-உம் நல்ல பயத்தல்-ஆல் செம்மை-இன்
நானம் கமழும் கதுப்பினாய் நன்று-ஏ-காண்
மானம்-உடையார் மதிப்பு

#295
பாவம்-உம் ஏனை-ப்-பழி-உம் பட வருவ
சாயினும் சான்றவர் செய்கலார் சாதல்

ஒரு—நாள் ஒரு—பொழுதை—த்—துன்பம் அவை—போல்
அரு—நவை—ஆற்றுதல்—இன்று

#296
மல்லல்—மா—ஞாலத்து வாழ்பவருள்—எல்லாம்
செல்வர் எனினும் கொடாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்த—க்—கண்—உம் பெரு—முத்தரையர்—ஏ
செல்வர்—ஐ ச் சென்று இரவாதார்

#297
கடை—எலாம் காய்—பசி அஞ்சும் மற்று—ஏனை
இடை—எலாம் இல்லாமை அஞ்சும் புடை உலாம்
வில்—புருவ—வேல்—நெடுங்—கண்ணாய் தலை—எலாம்
சொல்—பழி அஞ்சி விடும்

#298
நல்லர் பெரிது—அளியர் நல்கூர்ந்தார் என்று எள்ளி
செல்வர் சிறு—நோக்கு நோக்கும்—கால் கொல்லன்
உலை ஊதும் தீ—ஏ—போல் உள்—கனலும்—கொல்லோ
தலை—ஆய—சான்றோர் மனம்

#299
நச்சியார்—க்கு ஈயாமை நாண் அன்று நாள்—நாளும்
அச்சத்தால் நாணுதல் நாண்—அன்று—ஆம் எச்சத்தின்
மெல்லியர்—ஆகி த் தம்—மேலாயார் செய்தது
சொல்லாது—இருப்பது நாண்

#300
கடமா தொலைச்சிய கான்—உறை—வேங்கை
இடம்—வீழ்ந்தது உண்ணாது—இறக்கும் இடம்—உடைய—
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்

#301
நம்மால்-ஏ ஆவர் இ-ந்-நல்கூர்ந்தார் எ-ஞ்-ஞான்றும்
தம்-ஆல்-ஆம்-ஆக்கம்-இலர் என்று தம்மை
மருண்ட மனத்தார்-பின் செல்ப-வ்-ஓ தாம்-உம்
தெருண்ட அறிவினவர்

#302
இழித்தக்க செய்து ஒருவன் ஆர-உணல்-இன்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறு-ஓ
விழித்து இமைக்கும்-மாத்திரை-அன்று-ஓ ஒருவன்
அழித்து ப் பிறக்கும் பிறப்பு

#303
இல்லாமை கந்து-ஆ இரவு துணிந்து ஒருவர்
செல்லாரும் அல்லர் சிறு-நெறி புல்லா
அகம் புகு-மின் உண்ணு-மின் என்பவர்-மாட்டு-அல்லால்
முகம் புகுதல் ஆற்றும்-ஓ மேல்

#304
திரு த் தன்னை நீப்பினும் தெய்வம் செறினும்
உருத்த மனத்தோடு உயர்வு-உள்ளின்-அல்லால்
அருத்தம் செறிக்கும் அறிவிலார்-பின் சென்று
எருத்து இறைஞ்சி நில்லாது-ஆம் மேல்

#305
கரவாத திண்-அன்பின் கண்-அன்னார்-கண்-உம்
இரவாது வாழ்வது-ஆம் வாழ்க்கை இரவு-இன்-ஐ
உள்ளும்-கால் உள்ளம் உருகும்-ஆல் என்-கொலோ
கொள்ளும்-கால் கொள்வார் குறிப்பு

#306
இன்னு-இயைக இனிய-ஒழிக என்று
தன்னை-ஏ தான் இரப்ப த் தீர்வதற்கு என்னை-கொல்

காதல் கவற்றும் மனத்தினுல் கண் பாழ்—பட்டு
ஏதிலவர்—ஐ இரவு

#307
என்றும் புதியார் பிறப்பினும் இ—வ்—உலகத்து
என்றும் அவன்—ஏ பிறக்கல்—ஆன் குன்று—இன்
பரப்பு—எலாம் பொன் ஒழுகும் பாய்—அருவி—நாட
இரப்பார்—ஐ எள்ளா மகன்

#308
புறத்து த் தன்—இன்மை நலிய அகத்து த் தன்—
நல்—ஞானம் நீக்கி நிறீஇ ஒருவன்—ஐ
ஈயாய்—எனக்கு என்று இரப்பான்—ஏல் அ—ந்—நிலை—ஏ
மாயான்—ஓ மாற்றி—விடின்

#309
ஒருவர்—ஒருவர்—ஐ—ச்—சார்ந்து—ஒழுகல் ஆற்றி
வழி—படுதல் வல்லுதல்—அல்லால் பரிசு அழிந்து
செய்யீர்—ஓ என்னுனும் என்னும் சொல்—கு இன்னுது—ஏ
பைய த் தாம் செல்லும் நெறி

#310
பழமை கந்து—ஆக பசைந்த வழி—ஏ
கிழமை—தான் யாதானும் செய்க கிழமை
பொறுஅர் அவர் என்னின் பொத்தி தம்—நெஞ்சத்து
அறுஅ—ச்—சுடுவது—ஓர் தீ

#311
மெய்—ஞ்—ஞான—க்—கோட்டி உறழ் வழி வித்து ஆங்கு ஓர்—
அ—ஞ்—ஞானம் தந்திட்டு அது ஆங்கு அற த் துழாய்
கை—ஞ்—ஞானம் கொண்டு ஒழுகும் கார்—அறிவாளர்—முன்
சொல்—ஞானம் சோர—விடல்

#312
நா-ப்-பாடம் சொல்லி நயம்-உணர்வார்-போல் செறிக்கும்
தீ-ப்-புலவர் சேரார் செறிவுடையார் தீ-ப்-புலவன்
கோட்டி-உள் குன்ற க் குடி பழிக்கும் அல்லா-க்-கால்
தோள் புடை-க்-கொள்ளா-எழும்

#313
சொல் தாற்று-க்-கொண்டு சுனைத்து-எழுதல் காமுறுவர்
கற்ற-ஆற்றல்-வன்மை-உம் தாம் தேறுர் கற்ற-
செல-உரைக்கும் ஆறு அறியார் தோற்பது அறியார்
பல உரைக்கும் மாந்தர் பலர்

#314
கற்றதூஉம்-இன்றி கணக்காயர் பாடத்தால்
பெற்றது-ஆம்-பேதை ஓர்-சூத்திரம் மற்று அதன்-ஐ
நல்லார்-இடை ப் புக்கு நாணுது சொல்லி தன்-
புல்லறிவு காட்டி-விடும்

#315
வென்றி-ப்-பொருட்டு-ஆல் விலங்கு-ஒத்து மெய்-
கொள்ளார்
கன்றி க் கறுத்து எழுந்து காய்வார்-ஓடு ஒன்றி
உரை வித்தகம் எழுவார் காண்ப-வ்-ஏ கை-உள்
சுரை-வித்து ப் போலும் தம்-பல்

#316
பாடம்-ஏ ஓதி ப் பயன்-தெரிதல் தேற்றுத
மூடர் முனி-தக்க சொல்லும்-கால் கேடு அருஞ்-சீர் ச்
சான்றேர் சமழ்த்தனர் நிற்ப-வ்-ஏ மற்று அவர்-ஐ
ஈன்றுள்-கு இறப்ப ப் பரிந்து

#317
பெறுவது கொள்பவர் தோள் போல் நெறி-பட்டு க்
கற்பவர்-க்கு-எல்லாம் எளிய நூல் மற்று அம்-

முறி–புரை–மேனியர் உள்ளம் போன்று யார்க்கும்–
அறிதல்–கு–அரிய பொருள்

#318
புத்தகம்–ஏ சால–த்–தொகுத்தும் பொருள்–தெரியார்
உய்த்து அகம்–எல்லாம் நிறைப்பினும் மற்று அவற்றை ப்
போற்றும் புலவர்–உம்–வேறு–ஏ பொருள் தெரிந்து
தேற்றும் புலவர்–உம்–வேறு

#319
பொழிப்பு அகலம் நுட்பம் நூல் எச்சம் இ–ந–நான்கு–இன்
கொழித்து அகலம் காட்டாதார் சொல்–கள் பழிப்பு இல்
நிரை–ஆ–மா சேக்கும் நெடுங்–குன்ற–நாட
உரை–ஆம்–ஓ நூல்–இன்–கு நன்கு

#320
இற்பிறப்பு–இல்லார் எனைத்து–நூல்–கற்பினும்
சொல் பிறர்–ஐ க் காக்கும் கருவியர்–ஓ இல்–பிறந்த
நல்–அறிவாளர் நவின்ற நூல் தேற்றுதார்
புல்–அறிவு தாம்–அறிவது இல்

#321
அருளின் அறம் உரைக்கும் அன்புடையார் வாய்–ச்–சொல்
பொருள்–ஆக க் கொள்வர் புலவர் பொருள்–அல்லா–
ஏழை அதன்–ஐ இகழ்ந்து உரைக்கும் பால்–கூழ்–ஐ
மூழை சுவை உணராதாங்கு

#322
அவ்வியம்–இல்லார் அறத்து–ஆறு உரைக்கும்–கால்
செவ்வியர்–அல்லார் செவி–கொடுத்தும் கேட்கலார்
கவ்வி த் தோல் தின்னும் குணுங்கர்–நாய் பால்–சோற்றின்
செவ்வி கொளல் தேற்றுதாங்கு


proofed and segmented by v.s.r

#323
இமைக்கும்-அளவு-இல் தம்-இன்-உயிர் போம் ஆற்றை
எனைத்தானும் தாம்-கண்டு-இருந்தும் தினை-த்-துணை-உம்
நன்றி-புரிகல்லா நாண் இல் மட-மாக்கள்
பொன்றில்-என் பொன்று-க்-கால்-என்

#324
உள-நாள் சில-வ்-ஆல் உயிர்-க்கு ஏமம்-இன்று-ஆல்
பலர் மன்னும் தூற்றும் பழி-ஆல் பலர்-உள்ளும்
கண்டார்-ஓடு-எல்லாம் நகாஅது எவன்-ஒருவன்
தண்டி-தனி-ப்-பகை கோள்

#325
எய்தி-இருந்த அவை-முன்னர் ச் சென்று எள்ளி
வைதான் ஒருவன் ஒருவன்-ஐ வைய
வய-ப்-பட்டான் வாளா-இருப்பான்-ஏல் வைதான்
விய-த்-தக்கான் வாழும் எனின்

#326
மூப்பு மேல்-வாராமை-முன்னே அற-வினை-ஐ
ஊக்கி அதன்-கண் முயலாதான் நூக்கி
புறத்து இரு போகு என்னும் இன்னா-ச்-சொல் இல்-உள்
தொழுத்தை-ஆல் கூற-ப்-படும்

#327
தாம்-ஏ-உம் இன்புறார் தக்கார்-க்கு-உம் நன்று-ஆற்றார்
ஏமம்-சார் நல்-நெறி-உம் சேர்கலார் தாம் மயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தம்-ஏ வாழ்-நாளை ப்
போக்குவார் புல்-அறிவினார்

#328
சிறு-காலை-ஏ தமக்கு ச் செல்வுழி வல்சி
இறுகிறுக த் தோட்கோப்பு க் கொள்ளார் இறுகிறுகி

பின்-அறிவாம் என்று இருக்கும் பேதையார் கை காட்டும்
பொன்-உம் புளி-விளங்காய் ஆம்

#329
வெறுமை-இடத்து-உம் விழு-ப்-பிணி-ப்-போழ்து-உம்
மறுமை மனத்தர்-ஏ ஆகி மறுமை-ஐ
ஐந்து-ஐ அனைத்தானும் ஆற்றிய-காலத்து ச்
சிந்தியார் சிற்றறிவினர்

#330
என்னே மற்று இ-வ்-உடம்பு பெற்றும் அறம் நினையார்
கொன்னே-கழிப்பர் தம்-வாழ்-நாள்-ஐ அன்னோ
அளவு-இறந்த காதல் தம்-ஆர்-உயிர்-அன்னார் க்
கொள இழைக்கும் கூற்றம்-உம் கண்டு

#331
கொலைஞர் உலை-ஏற்றி த் தீ-மடுப்ப ஆமை
நிலை அறியாது அ-ந்-நீர் படிந்து ஆடியற்று-ஏ
கொலை வல் கொடுங்-கூற்றம் கோள் பார்ப்ப ஈண்டை
வலை-அகத்து ச் செம்மாப்பார் மாண்பு

#332
பெருங்-கடல் ஆடிய-சென்றார் ஒருங்கு-உடன்
ஓசை அவிந்த-பின் ஆடுதும் என்றற்று-ஆல்
இல் செய் குறை-வினை நீக்கி அற-வினை
மற்று அறிவாம் என்று இருப்பார் மாண்பு

#333
குலம் தவம் கல்வி குடிமை மூப்பு ஐந்து-உம்
விலங்காமல் எய்திய-க்-கண்-உம் நலம் சான்ற
மை-அறு தொல்-சீர் உலகம் அறியாமை
நெய்-இலா ப் பால்-சோற்றின்-நேர்


proofed and segmented by v.s.r

#334
கல்–நனி–நல்ல கடை–ஆய–மாக்கள்–இன்
சொல் நனி–தாம்–உணரா–ஆயினும் இன்னினி–ஏ
நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதல் என்று
உற்றவர்–க்கு த் தாம் உதவல்–ஆன்

#335
பெறுவது–ஒன்று–இன்றியும் பெற்றுன்–ஏ–போல க்
கறுவு–கொண்டு ஏலாதார்–மாட்டும் கறு–இன்–ஆல்
கோத்து இன்னு கூறி உரையா–க்–கால் பேதை–க்கு
நா த் தின்னும் நல்ல சுனைத்து

#336
தம்–கண் அமர்பு–இல்லார்–பின் சென்று தாம் அவர்–ஐ
எம்–கண் வணக்குதும் என்பவர் புன்–கேண்மை
நல்–தளிர் ப் புன்னை மலரும் கடல்–சேர்ப்ப
கல் கிள்ளி க் கை இழந்தற்று
#337
ஆகாது–எனினும் அகத்து நெய் உண்டாகின்
போகாது எறும்பு புறம் சுற்றும் யாதும்
கொடாஅர் எனினும் உடையார்–ஐ ப் பற்றி
விடாஅர்–உலகத்தவர்

#338
நல்லவை நாள்–தொறும் எய்தார் அறம் செய்யார்
இல்லாதார்–க்கு யாது–ஒன்றும் ஈகலார் எல்லாம்–
இனியார் தோள் சேரார் இசை–பட–வாழார்
முனியார்–கொல் தாம்–வாழும்–நாள்

#339
விழைந்து ஒருவர் தம்மை வியப்ப ஒருவர்
விழைந்திலேம் என்று இருக்கும் கேண்மை தழங்–குரல்
பாய் திரை சூழ் வையம் பயப்பினும் இன்னுது–ஏ
ஆய்–நலம்–இல்லாதார்–மாட்டு

-------------------------------------

proofed and segmented by v.s.r

#340
கற்றவும் கண்–அகன்ற–சாயல்–உம் இல்–பிறப்பு–உம்
பக்கத்தார் பாராட்ட ப் பாடு–எய்தும் தான் உரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்து–இன் தணியாத
பித்தன் என்று எள்ள–ப்–படும்

#341
கப்பி கடவது–ஆ க் காலே த் தன்–வாய் ப் பெயினும்
குப்பை கிளைப்பு ஓவா க் கோழி–போல் மிக்க–
கனம் பொதிந்த நூல் விரித்து க் காட்டினும் கீழ் தன்–
மனம் புரிந்தவாறு–ஏ மிகும்

#342
காழ்–ஆய கொண்டு கசடு–அற்றார்–தம்–சாரல்
தாழாது போவாம் என உரைப்பின் கீழ்–தான்
உறங்குவாம் என்று எழுந்து போம்–ஆம் அஃது–அன்றி
மறங்கும்–ஆம் மற்று–ஒன்று உரைத்து

#343
பெரு–நடை தாம் பெறினும் பெற்றி பிழையாது
ஒரு–நடையர் ஆகுவர் சான்றோர் பெரு–நடை
பெற்ற–க்–கடைத்து–உம் பிறங்கு–அருவி–நல்–நாட
வற்று–ஆம்–ஒரு–நடை–கீழ்

#344
தினை–அனைத்து–ஏ–ஆயினும் செய்த–நன்று–உண்டு–ஆல்
பனை–அனைத்து–ஆ உள்ளுவர் சான்றோர் பனை–அனைத்து
என்றும் செயினும் இலங்கு–அருவி–நல்–நாட
நன்று–இல நன்று–அறியார்–மாட்டு

#345
பொன்–கலத்து ஊட்டி ப் புறந்தரினும் நாய் பிறர்–
எச்சில்–கு இமையாது–பார்த்து–இருக்கும் அ–ச்–சீர்


proofed and segmented by v.s.r

பெருமை உடைத்து–ஆ க் கொளினும் கீழ்–செய்யும்–
கருமங்கள் வேறு–படும்

#346
சக்கர–ச்–செல்வம் பெறினும் விழுமியோர்
எ–க்–கால்–உம் சொல்லார் மிகுதி–ச்–சொல் எ–க்–கால்–
உம்
முந்திரி–மேல்–காணி மிகுவது–ஏல் கீழ்–தன்னை–
இந்திரன்–ஆ–எண்ணி–விடும்

#347
மை–தீர் பசும்–பொன்–மேல் மாண்ட–மணி அழுத்தி ச்
செய்தது எனினும் செருப்பு–த்–தன்–கால்–கு–ஏ–ஆம்
எய்திய செல்வத்தர் ஆயினும் கீழ்கள்–ஐ ச்
செய்–தொழிலால் காண–ப்–படும்

#348
கடுக்க்–என சொல்வற்று–ஆம் கண்ணோட்டம்–இன்று–ஆம்
இடுக்கண் பிறர்–மாட்டு உவக்கும் அடுத்து–அடுத்து
வேகம்–உடைத்து ஆம் விறல்–மலை–நல்–நாட
ஏகும்–ஆம் எள்ளும்–ஆம் கீழ்

#349
பழையர் இவர் என பல்–நாள் பின்–நிற்பின்
உழை–இனியர் ஆகுவர் சான்றோர் விழையாதே
கள் உயிர்க்கும் நெய்தல் கனை–கடல்–தண்–சேர்ப்ப
எள்ளுவர் கீழ்–ஆயவர்

#350
கொய் புல் கொடுத்து க் குறைத்து என்றும் தீற்றினும்
வையம்–பூண்கல்லா சிறு–குண்டை ஐய–கேள்
எய்திய செல்வத்தர் ஆயினும் கீழ்கள்–ஐ ச்
செய்–தொழில்–ஆல் காண–ப்–படும்


proofed and segmented by v.s.r

#351
ஆர்த்த-அறிவினர் ஆண்டு இளையர் ஆயினும்
காத்து ஓம்பி த் தம்மை அடக்குப மூத்தொறூஉம்
தீ-த்-தொழில்-ஏ கன்றி த் திரிதந்து எருவை-போல்
போத்து-அறார் புல்லறிவினார்

#352
செழும்-பெரும்-பொய்கை-உள் வாழினும் என்றும்
வழும்பு அறுக்ககில்லா-வ்-ஆம் தேரை வழும்பு-இல்-சீர்-
நூல் கற்ற-க்-கண்-உம் நுணுக்கம்-ஒன்று-இல்லாதார்
தேர்கிற்கும்-பெற்றி அரிது

#353
கணம்-மலை-நல்-நாட கண்-இன்று ஒருவர்
குணன்-ஏ-உம் கூறல்-கு அரிது-ஆல் குணன் அழுங்க க்
குற்றம் உழை நின்று கூறும் சிறியவர்கள்-கு
எற்று-ஆல் இயன்றது-ஓ நா

#354
கோடு ஏந்து அகல்-அல்குல் பெண்டிர்-தம்-பெண்-நீர்மை
சேடியர்-போல ச் செயல் தேற்றார் கூடி
புது-ப்-பெருக்கம்-போல த் தம்-பெண்-நீர்மை காட்டி
மதித்து இறப்பர் மற்றையவர்

#355
தளிர்-மேல்-ஏ நிற்பினும் தட்டாமல் செல்லா
உளி நீரர்-மாதோ கயவர் அளி-நீரார்-க்கு
என்னானும் செய்யார் எனைத்தானும் செய்ப-வ்-ஏ
இன்னாங்கு செய்வார் ப் பெறின்

#356
மலை-நலம் உள்ளும் குறவன் பயந்த
விளை-நிலம் உள்ளும் உழவன் சிறந்து ஒருவர்


proofed and segmented by v.s.r

செய்த நன்று உள்ளுவர் சான்றோர் கயம்-தன்னை-
வைததை-உள்ளி-விடும்

#357
ஒரு-நன்றி செய்தவர்-க்கு ஒன்றி எழுந்த
பிழை-நூறு-உம் சான்றோர் பொறுப்பர் கயவர்-க்கு
எழு-நூறு நன்றி செய்து ஒன்று தீது ஆயின்
எழு-நூறு-உம் தீது-ஆய்-விடும்

#358
ஏட்டை-ப்-பருவத்து-உம் இல்-பிறந்தார் செய்வன
மோட்டிடத்து-உம் செய்யார் முழு-மக்கள் கோட்டை
வயிரம் செறிப்பினும் வாள்-கண்ணாய் பன்றி
செயிர் வேழம்-ஆகுதல் இன்று

#359
இன்று-ஆதும் இ-ந்-நிலை-ஏ ஆதும் இனி ச் சிறிது
நின்று ஆதும் என்று நினைத்து-இருந்து ஒன்றி
உரை-இன்-மகிழ்ந்து தம்-உள்ளம்-வேறு-ஆகி
மரை-இலை-இன் மாய்ந்தார் பலர்

#360
நீர்-உள் பிறந்து நிறம் பசியது ஆயினும்
ஈரம் கிடை-அகத்து இல்-ஆகும் ஓரும்
நிறை-ப்-பெருஞ்-செல்வத்து நின்ற-க்-கடைத்து-உம்
அறை-ப்-பெருங்-கல்-அன்னார் உடைத்து

#361
மழை திளைக்கும் மாடம்-ஆய் மாண்பு அமைந்த காப்பு-
ஆய்
இழை விளக்கு நின்று இமைப்பின் என்-ஆம் விழை-தக்க
மாண்ட மனையாள்-ஐ-இல்லாதான் இல்லகம்
காண்டல்-கு அரியது-ஓர்-காடு


proofed and segmented by v.s.r

#362
வழுக்கு—எனைத்தும் இல்லாத வாள்—வாய் க் கிடந்தும்
இழுக்கு—இன்—ஐ த் தாம் பெறுவர் ஆயின் இழுக்கு—
எனைத்தும்
செய்குறு ப் பாணி சிறிது—ஏ அ—ச்—சின்—மொழியார்
கை—உறு ப் பாணி பெரிது

#363
எறி—என்று எதிர்—நிற்பாள் கூற்றம் சிறு—காலை
அட்டில்—புகாதாள் அரும்—பிணி அட்டதனை—
உண்டி—உதவாதாள் இல்—வாழ்—பேய் இ—ம்—மூவர்
கொண்டான்—ஐ க் கொல்லும் படை

#364
கடி என க் கேட்டும் கடியான் வெடி—பட
ஆர்ப்பது கேட்டும் அது தெளியான் பேர்த்தும் ஓர்—
இல்—கொண்டு இனிது—இரூஉம்—ஏமுறுதல் என்ப—வ்—ஏ
கல்—கொண்டு எறியும் தவறு

#365
தலை—ஏ தவம் முயன்று வாழ்தல் ஒருவர்—க்கு
இடை—ஏ இனியார்—கண் தங்கல் கடை—ஏ
புணராது என்று எண்ணி ப் பொருள் நசை—ஆல் தம்மை—
உணரார்—பின் சென்று நிலை

#366
கல்லா—க்—கழிப்பர் தலை—ஆயார் நல்லவை
துவ்வா—க்—கழிப்பர் இடைகள் கடைகள்
இனிது—உண்ணேம் ஆற—ப்—பெறேம்—யாம் என்னும்
முனிவு—இன்—ஆல் கண்பாடு இலர்

#367
செந்நெல்—ஆல்—ஆய—செழு—முளை மற்றும் அ—ச்—
செந்நெல்—ஏ—ஆகி விளைதல்—ஆல் அ—ந்—நெல்

வயல்–நிறைய க் காய்க்கும் வள–வயல்–ஊர
மகன் அறிவு தந்தை அறிவு

#368
உடை–ப்–பெருஞ்–செல்வர்–உம் சான்றோர்–உம் கெட்டு
புடை–ப்–பெண்டிர் மக்கள்–உம் கீழ்–உம் பெருகி
கடை–க்–கால் தலைக்கண்ணது–ஆகி குடைக்கால்–போல்
கீழ்–மேல்–ஆய் நிற்கும் உலகு

#369
இனியார் தம்–நெஞ்சத்து–நோய் உரைப்ப அ–ந்–நோய்–
தணியாத–உள்ளம்–உடையார் மணி வரன்றி
வீழும் அருவி விறல்–மலை–நல்–நாட
வாழ்வு–இன்–வரை பாய்தல் நன்று
#370
புது–ப்–புனல்–உம் பூ–ங்–குழையார் நட்பு–உம் இரண்டு–
உம்
விதுப்பு–அற நாடின் வேறு–அல்ல புது–ப்–புனல்–உம்
மாரி அறவே–அறும்–ஏ அவர்–அன்பு–உம்
வாரி அறவே–அறும்

#371
விளக்கு–ஒளி–உம் வேசையர்–நட்பு–உம் இரண்டு–உம்
துளக்கு–அற நாடின் வேறு–அல்ல விளக்கு–ஒளி–உம்
நெய்–அற்ற–கண்–ஏ அறும்–ஏ அவர்–அன்பு–உம்
கை–அற்ற–கண்–ஏ அறும்

#372
அம்–கோட்டு–அகல்–அல்குல்–ஆய்–இழையாள் நம்–ஒடு
செங்–கோடு பாய்தும்–ஏ என்றாள்–மன் செங்–கோட்டின்–
மேல் காணம்–இன்மை–ஆல் மேவாது–ஒழிந்தாள்–ஏ
கால்–கால்–நோய் காட்டி க் கலுழ்ந்து


-----------------------------------
proofed and segmented by v.s.r

#373
அம்–கண் விசும்பு–இன் அமரர்–தொழப்படும்–
செங்கண்மால் ஆயினும் ஆக–மன் தம்–கை க்
கொடுப்பது–ஒன்று–இல்லார்–ஐ கொய்–தளிர்–அன்னூர்
விடுப்பர் தம்–கை–ஆல் தொழுது

#374
ஆணம்–இல்–நெஞ்சத்து அணி–நீல–க்–கண்ணூர்–க்கு க்
காணம்–இல்லாதார் கடு–அனையர் காண–வ்–ஏ
செக்கு ஊர்ந்து கொண்டானும் செய்த–பொருள்–உடையார்
அக்காரம்–அன்னூர் அவர்–க்கு

#375
பாம்பு–இன்–கு ஒரு–தலை காட்டி ஒரு–தலை
தேம்–படு தெண்–கயத்து–மீன் காட்டும் ஆங்கு
மலங்கு–அன்ன செய்கை மகளிர் தோள் சேர்வர்
விலங்கு–அன்ன வெள்–அறிவினூர்

#376
பொத்த–நூல்–கல்–உம் புணர்–பிரியா–அன்றில்–உம்–
போல்
நித்தலும் நம்மை ப் பிரியலம் என்று உரைத்த
பொற்றொடி–உம் போர் த் தகர்–க்–கோடு–ஆயினுள் நல்–
நெஞ்சே
நிற்றி–ஓ போதி–ஓ நீ

#377
ஆமா–போல் நக்கி அவர் கை–ப்–பொருள் கொண்டு
சேமா–போல் குப்புறூஉம் சில்லை–க்–கண் அன்பு–இன்–ஐ
ஏமாந்து எமது என்று இருந்தார் பெறுப–வ்–ஏ
தாம்–ஆம் பலர்–ஆல் நகை


-------------------------------------
proofed and segmented by v.s.r

#378
ஏமாந்த-போழ்து-இன் இனியார்-போன்று இன்னுர்-ஆய் த்
தாம்-ஆர்ந்த-போது-ஏ தகர்-க்-கோடு-ஆம் மான்-
நோக்கு-இன்
தம்-நெறி-ப்-பெண்டிர் தட-முலே சேரார்-ஏ
செந்-நெறி ச் சேர்தும் என்பார்

#379
ஊறு செய் நெஞ்சம் தம்-உள் அடக்கி ஒண்ணுதலார்
தேற மொழிந்த மொழி கேட்டு தேறி
எமர் என்று கொள்வார்-உம் கொள்ப-வ்-ஏ யார்க்கும்-
தமர்-அல்லர் தம்-உடம்பினுர்

#380
உள்ளம் ஒருவன் உழையது-ஆ ஒண்ணுதலார்
கள்ளத்தால் செய்யும் கருத்து-எல்லாம் தெள்ளி-
அறிந்த-இடத்து-உம் அறியார்-ஆம் பாவம்
செறிந்த உடம்பினவர்

#381
அரும்-பெறல்-கற்பு-இன் அயிராணி-அன்ன
பெரும்-பெயர்-ப்-பெண்டிர் எனினும் விரும்பி-ப்-
பெறு-நசை-ஆல் பின்-நிற்பார் இன்மை-ஏ பேணும்
நறுநுதலாள் நன்மை-த்-துணே

#382
குட-நீர் அட்டு உண்ணும் இடுக்கண்-பொழுது-உம்
கடல்-நீர் அற-உண்ணும் கேளிர் வரினும்
கடன் நீர்மை கையாறு-ஆ க் கொள்ளும் மட-மொழி-
மாதர் மனே-மாட்சியாள்


-------------------------------------
proofed and segmented by v.s.r

#383
நால்–ஆறு–உம் ஆறு–ஆய் நனி–சிறிது–ஆய் எ–ப்–புறன்–உம்
மால்–ஆறு–மேல் உறை சோரினும் மேல்–ஆய
வல்லாள்–ஆய் வாழும் ஊர் தன்–புகழும் மாண்–கற்பு–இன்
இல்லாள் அமைந்தது–ஏ இல்

#384
கண்–கு இனியாள் காதலன் காதல் வகை புனைவாள்
உட்கு–உடையாள் ஊர்–ஆண்–இயல்பினுள் உட்கி
இடன்–அறிந்து ஊடி இனிதின்–உணரும்
மட–மொழி–மாதராள் பெண்

#385
எ–ஞ்–ஞான்றும் எம்–கணவர் எம்–தோள்–மேல் சேர்ந்து எழினும்
அ–ஞ்–ஞான்று கண்டேம்–போல் நாணுதும்–ஆல் எ–ஞ்–ஞான்றும்
என்னை–கெழீஇயினர்–கொல்லோ பொருள்–நசை–ஆல்
பல்–மார்பு சேர்ந்து ஒழுகுவார்

#386
உள்ளத்து உணர்வு–உடையான் ஓதிய–நூல்–அற்று–ஆல்
வள்ளன்மை–பூண்டான்–கண் ஒண்–பொருள் தெள்ளிய
ஆண்மகன் கை–இல் அயில் வாள்–அனைத்து–அரோ
நாண்–உடையாள் பெற்ற நலமே

#387
கருங்–கொள்–உம் செங்–கொள்–உம் தூணி–ப்–பதக்கு என்று
ஒருங்கு–ஒப்ப–க்–கொண்டான்–ஆம் ஊரன் ஒருங்கு–ஒவ்வா
நல்–நுதலார் த் தோய்ந்த வரை–மார்பன் நீராடாது
என்னை–உம் தோய வரும்


--------------------------------------
proofed and segmented by v.s.r

#388
கொடியவை கூறாதி பாண நீ கூறின்
அடி—பைய—இட்டு ஒதுங்கி ச் சென்று துடி—இன்
இட—க்—கண்—அனையம்—யாம் ஊரன்—கு அதனால்
வல—க்—கண்—அனையார்—க்கு உரை

#389
சாய்—ப்—பறிக்க நீர்—திகழும் தண்—வயல்—ஊரன்—மீது
ஈ ப் பறக்க நொந்தேன்—உம்—யான்—ஏ—மன் தீ ப் பறக்க த்
தாக்கி முலை பொருத தண்—சாந்து அணி அகலம்
நோக்கி—இருந்தேன்—உம்—யான்

#390
அரும்பு அவிழ் தாரினான் எம்—அருளும் என்று
பெரும்—பொய் உரையாதி பாண கரும்பு—இன்
கடை—க்—கண்—அனையம்—யாம் ஊரன்—கு அதனால்
இடை—க்—கண்—அனையார்—க்கு உரை

#391
முயங்கா—க்—கால் பாயும் பசலை மற்று ஊடி
உயங்கா—க்—கால் உப்பு—இன்று—ஆம் காமம் வயங்கு ஓதம்
நில்லா—த்—திரை அலைக்கும் நீள்—கழி—த்—தண்—சேர்ப்ப
புல்லா—ப்—புலப்பது—ஓர்—ஆறு

#392
தம்—அமர்—காதலர் தார் சூழ் அணி—அகலம்
விம்ம முயங்கும் துணை—இல்லார்—க்கு இம்—என ப்
பெய்ய எழிலி முழங்கும் திசை—எல்லாம்
நெய்தல்—அறைந்தன்ன—நீர்த்து

#393
கம்மம்—செய்—மாக்கள் கருவி ஒடுக்கிய
மம்மர்—கொள்—மாலை மலர் ஆய்ந்து பூ—த்—தொடுப்பாள்


-------------------------------------
proofed and segmented by v.s.r

கை–ம்–மாலை–இட்டு க் கலுழ்ந்தாள் துணை–இல்லார்–க்கு
இ–ம்–மாலை என்–செய்வது என்று

#394
செல் சுடர் நோக்கி ச் சிதர்–அரி–க்–கண் கொண்ட நீர்
மெல்–விரல் ஊழ் தெறியா–விம்மி தன்–மெல்–விரல்–இன்
நாள்–வைத்து நம்–குற்றம் எண்ணும்–கொல் அந்தோ தன்–
தோள் வைத்து அணை–மேல் கிடந்து

#395
கண் கயல் என்னும் கருத்து–இன்–ஆல் காதலி–
பின் சென்றது–அம்ம சிறு–சிரல் பின்–சென்றும்
ஊக்கி–எழுந்தும் எறிகல்லா ஒண்–புருவம்–
கோட்டிய–வில்–வாக்கு அறிந்து

#396
அரக்கு ஆம்பல் நாறும் வாய் அ–ம்–மருங்கு–இன்–கு
அன்னோ
பரல்–கானம் ஆற்றின–கொல்லோ அரக்கு–ஆர்ந்த–
பஞ்சி கொண்டு ஊட்டினும் பையென–பையென என்று
அஞ்சி பின்–வாங்கும் அடி

#397
ஓலை–க்–கணக்கர் ஒலி அடங்கு புன்–செக்கர்
மாலை–ப்–பொழுது–இல் மணந்தார் பிரிவு உள்ளி
மாலை–பரிந்து–இட்டு அழுதாள் வன–முலை–மேல்
கோலம் செய் சாந்தம் திமிர்ந்து

#398
கடக்க–அருங்–கானத்து காளை–பின் நாளை
நடக்கவும்–வல்லை–ஓ என்றி சுடர்த்தொடீஇ
பெற்றான்–ஒருவன் பெருங்–குதிரை அ–ந்–நிலை–ஏ
கற்றான் அஃது–ஊரும்–ஆறு

#399
முலைக்கண்-உம் முத்து-உம் முழு-மெய்-உம் புல்லும்-
இலக்கணம்-யாதும் அறியேன் கலை-க்-கணம்
வேங்கை வெரூஉம் நெறி செலிய-போலும் என்-
பூம்பாவை செய்த குறி

#400
கண்-மூன்று-உடையான்-உம் காக்கை-உம் பை-அரவு-உம்
என்-ஈன்ற-யாய்-உம் பிழைத்தது-என் பொன்-ஈன்ற-
கோங்கு-அரும்பு-அன்ன-முலையாய் பொருள்-வயின்-
பாங்கனூர் சென்ற நெறி